DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC 10/2025** | | | |
| Deposition of Witness for | PW 1 | | | |
| | Prosecution | | | |
| | Court | | | |
| Name | : **திரு.ஆறுமுகம்** | Taluk | : | தலைவாசல் |
| Father/Husband Name | : **த.பெ. திரு. கிருஷ்ணன்** | Calling | : | கூலி |
| Village | : வேப்பம்பூண்டி | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.02.2026 துவக்க நேரம்**

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

1 நான் தற்சமயம் வேப்பம்பூண்டியில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்த போஜன் என்பவரை தெரியும். எனது சித்தப்பா ஆவார். எதிரியை தெரியும்.

2. தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 2024 ஆம் வருடம்

மேற்கு வங்காளத்திலிருந்து சுமார் 10 பேர் கட்டிட வேலை செய்வதற்காக ஆத்துாருக்கு வந்தோம்.நாங்கள் யூனியன் ஆபிஸ் கட்டிடத்தில் வேலை செய்து முடித்துவிட்டு மாலை சுமார் 05.00 மணியளவில் நாங்கள் தங்கி இருந்த இடத்திற்கு நானும், என்னுடன் வேலை செய்தவர்களும் வந்துவிட்டோம். நாங்கள் ரூமில் இருந்தபோது கட்டிடத்திலிருந்து ஒருவர் தவறி கீழே விழுந்து அடிப்பட்டு விட்டதாக சத்தம் கேட்டு கட்டிடத்திற்கு அருகே சென்றோம்.

3. மேற்படி இடத்திற்கு சென்று பார்த்தபோது, மினாக் ஷேக் என்பவர் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு மயக்கநிலையில் இருந்தார். உடனே நாங்கள் கான்ட்ராக்டர் முருகேசன் மற்றும் சுந்தரராஜ் ஆகியோருக்கு தகவல் சொன்னோம். அவர்களும் அந்த இடத்திற்கு வந்து விட்டனர். உடனே காயம்பட்ட நபரை ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். பிறகு மேல்சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கும் அதன்பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கும் அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு சிகிச்சை பலனின்றி மினாக் சேக் இறந்து விட்டார்.

4. நான் உடனே இந்த தகவலை காவல் நிலையத்தில் சொன்னேன். போலிசார் என்னிடம் கையெழுத்து போட சொல்லி கேட்டார்கள். நானும் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார்மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் **(அ.த. சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** வழக்கு சம்மந்தமாக போலிசார் வேறு எதுவும் விசாரிக்கவில்லை.

**சாட்சி, குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்திருப்பதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் மேற்கு வங்காள மாநிலத்தை பூர்வீகமாக கொண்டவர் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. பேச மட்டும் தெரியும். எனக்கு தமிழ் சரளமாக பேச வருமா என்றால் நான் கடந்த 10 வருடங்களாக தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் தங்கி கட்டிட வேலை செய்து வருகிறேன். எனக்கு தமிழ் பேச தெரியும்.எதிரிகளை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 04 வருடங்களாக தெரியும்.

2. எனக்கு திருமணமாகி விட்டது என்றால் சரிதான். எத்தனை குழந்தைகள் உள்ளன என்றால் இரண்டு குழந்தைகள் உள்ளனர் . விபத்தில் இறந்த மினாக் ஷேக் நண்பரா என்றால் எனது சொந்த சித்தி மகன் ஆவார்.

3. கடந்த 07.05.2023 அன்று மாலை 06.15 மணியளவில் மினாக் சேக் என்பவர் கட்டிடத்தில் வேலை செய்து வந்தபோது கால் தடுமாறி, கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் மேற்படி விபத்திற்கு காரணம் கட்டிட கான்டிராக்டர் முருகேசன் மற்றும் மேற்பார்வையாளர் சுந்தரராஜன் ஆகியோர்கள் தான் உரிய பாதுகாப்பு கவசம் கொடுக்காமல் வேலை வாங்கியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை.நாங்கள் பணியை முடித்துவிட்டு அனைவரும் எங்களது அறைக்கு சென்றுவிட்டோம். மினாக் சேக் மீண்டும் அங்கு எதற்கு போனார் என்று எங்களுக்கு தெரியவில்லை. மினாக் சேக் தான் தெரியாமல் கட்டிடத்திலிருந்து கீழே விழுந்து விட்டார் என்று தான் போலிசாரிடம் சொன்னேன்.

4.கடந்த 07.05.2023 அன்று மாலை 06.15 மணியளவில் மினாக் சேக் என்பவர் கட்டிடத்தில் வேலை செய்து வந்தபோது கால் தடுமாறி, கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் மேற்படி விபத்திற்கு காரணம் கட்டிட கான்டிராக்டர் முருகேசன் மற்றும் மேற்பார்வையாளர் சுந்தரராஜன் ஆகியோர்கள் தான் உரிய பாதுகாப்பு கவசம் கொடுக்காமல் வேலை வாங்கியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக போலிசாரிடம் கொடுத்த புகாரிலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது வழக்கு எதிரிகள் நன்கு தெரிந்தவர்கள் என்பதாலும் அவர்களிடம் வேலை செய்து வந்ததாலும் வழக்கிலிருந்து எதிரிகளை காப்பாற்ற முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.35

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2026.02.11 15:21:18 +0530

Judicial Magistrate No.1,
Attur.